# யாழ் தபால் நிலையம் முன்னால் நடந்து வந்தவர் கோட்டை பக்கமிருந்து வந்த சூடுபட்டு மரணம்

நேற்று நண்பகல் யாழ். பெரிய தபாற்கந்தோருக்கும் பெற்றோல் நிலையத்துக்கும் சமீபமாக வீதியில் நடந்து வந்த இளைஞர் ஒருவர் கோட்டை பக்கமிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுக்கு ஸ்தலத்திலேயே பலியானார். இவரது சடலம் அம்புலன்ஸ் மூலம் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறந்தவர் கச்சேரி-நல்லூர் வீதியைச் சேர்ந்த வீ. எம். ரஞ்சன் (26) என அவரது உறவினரால் அடையாளம் காணப்பட்டது. மரண விசாரணை இன்று நடைபெறவுள்ளது. மெக்கானிக் தொழில் செய்யும் இவர் கையில் சில உதிரிப்பாகத்துடன் வந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. இரத்த வெள்ளத்தில் இவரது சடலம் கிடந்ததாக அதனை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தவர்கள் தெரிவித்தனர். இச்சம்பவத்தையடுத்து தபாற்கந்தோர் வீதி, பொதுமக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக்கிடக்கக் காணப்பட்டது. தபாற்கந்தோர் ஊழியர்களும் அங்கு கடமையாற்ற அச்சம் தெரிவித்துள்ளனர்.

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 28-11-85 வியாழன் (கார்த்திகை 13 ரபியு அல் 15) முழக்கம் 293

★ மட்டக்களப்பு நோக்கிச் சென்ற பஸ்ஸிலிருந்து

# பொல்லனறுவையில் 7 தமிழர் வழியில் இறக்கப்பட்டுக் கொலை!

## நான்கு கொழும்பு சிங்கள வர்த்தகர்கள் கொல்லப்பட்டதன் எதிரொலிச் சம்பவம்?

(ராய்ட்டர் சேவை)

மட்டுநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று பொல்லனறுவையில் வைத்து வழிமறிக்கப்பட்டு, அதிலிருந்து ஏழு தமிழ்ப் பயணிகளும் கீழே இறக்கப்பட்டு, சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக ராய்ட்டர் நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பஸ் தனியாருக்குச் சொந்தமானதென்றும், கொழும்பிலிருந்து மட்டுநகருக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இத்தாக்குதல் நடைபெற்றதாகவும் கூறப்படுகின்றபோதிலும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

இந்த பஸ் பொல்லனறுவையைத் தாண்டி மட்டுநகர் நோக்கிச் செல்கையில் ஆயுதம் தாங்கிய சுமார் முப்பது பேரைக்கொண்ட கோஷ்டியொன்று பஸ்சை மறித்ததும்,

...6ஆம் பக்கம் பார்க்க

## கடற்கரையில் ஆணின் சடலம்

(மண்கும்பான்)

வேலணை தெற்கு கடற்கரையோரத்தில் இனம் தெரியாத

...6ம் பக்கம் பார்க்க

## கடத்தப்பட்ட இந்து மதகுரு பற்றித் தகவல் எதுவுமில்லை

(மட்டுநகர்)

பெரியபுல்லுமலைப் பகுதியில் நேற்று முன்தினம் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்ட இந்துமத குரு உட்பட பதினொன்குபேர் பற்றிய எந்தத் தகவலும் இன்னமும் பெறப்படவில்லை.

இக்கடத்தல் சம்பவம் பற்றி சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் பொலிஸில் புகார் செய்யப்பட்டபோதிலும், மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை

வீதிகளில் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதால் தம்மால் தேடுதல் நட

...6ஆம் பக்கம் பார்க்க

மிகவும் அந்தரங்கமான முறையில்

## கொழும்பு உயர் பீடம் டிக்ஸிற்றுடன் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பாரதத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுடன் கொழும்பு உயர்பீடம் சில முக்கியமான விடயங்கள் தொடர்பாக நேற்று மந்திராலோசனை நடத்தியதாக தெரியவந்துள்ளது.

மிகவும் அந்தரங்கமான முறையில் இவ் ஆலோசனைகள் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்

...6ம் பக்கம் பார்க்க

தர்மபுரத்தில் நேற்றுக்காலை

## 2 பெண்களும், 2 இளைஞரும் இராணுவத்தினரால் கைது!

(கிளிநொச்சி)

நேற்றுக்காலை தர்மபுரத்துக்குச் சென்ற ஆயுதப்படையினர் ஒரு வீட்டிலிருந்த இரு பெண்களையும், திரும்பி வரும் வழியில் முரசுமோட்டையில் இரு இளைஞர்களையும் கைது செய்து அழைத்துச் சென்றதோடு ஒரு லொறியையும் கொண்டு சென்றனர்.

நேற்றுக்காலை எட்டு மணியளவில் ஒரு மினி பஸ்ஸில் வந்த இராணுவத்தினர் தர்மபுரத்தில் ஒரு வீட்டிற்குள் சென்று திருமதி அரசம்மா முருகேசு (55), மு. குகாஜினி (20) ஆகிய இருவரையும், முரசுமோட்டையில் செல்வம் என்று அழைக்கப்படும் லொறிச் சாரதியையும், கிளினரையும் கைது செய்து அழைத்துச் சென்றதோடு லொறியையும் கொண்டு சென்றனர்.

...6 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் படகு பிடிபட்டது

நெடுந்தீவிற்குச் சமீபமாக வள்ளத்தில் வந்துகொண்டி

—6 ஆம் பக்கம் பார்க்க

நேற்றுச் சூடுபட்ட

## பொற்கோவில் பிரதம குரு ஆபத்தைத் தாண்டிவிட்டார்

(புதுடில்லி)

பஞ்சாப் பொற்கோவிலில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயத்துக்குள்ளான பிரதமகுரு சாஹிபஸிங் நேற்று அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, குண்டொன்று அப்புறப்படுத்தப்பட்டது.

இவர் ஆபத்தைத் தாண்டி

...6 ஆம் பக்கம் பார்க்க

சென்னையில் விடுதலைப் புலிகள் அறிக்கை:

## தமிழீழப் போராளிகளை ஒழித்துக்கட்ட ராணுவம் முழுமூச்சாக செயல்படுகிறது!

(சென்னை)

காண்டியனாறு என்ற இடத்திலுள்ள தமிழ் விடுதலைப் போராளிகளின் முகாமொன்றை இராணுவத்தினர் சுற்றி வளைத்து தாக்க முயற்சி செய்ததாகவும், விடுதலைப் போராளிகள் கைக்குண்டுகளை வீசி இராணுவத்தின் தாக்குதலை முறியடித்து தப்பிச் சென்றுவிட்டதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி விடுதலைப் போராளிகளை தேடி ஒழித்துக்கட்டும் வேலைகளுக்கு ஹெலிக்கப்டர்களையும் இராணுவத்தினர் இப்பொழுது பாவிக்கின்றார்கள் எனவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வித காரணமுமின்றி கடந்த திங்கட்கிழமை திருமலையில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டுத் தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும், மட்டக்களப்பில் ஊர்காவல் படையினரால் கடத்திச் செல்லப்பட்ட இருபத்தைந்து தமிழர்கள் என்ன ஆனார்கள்

... 6ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு தொலைபேசி 'அவுட்'

## இன்று 19வது நாள்

ஈழமுரசு தொலைபேசி பழுதடைந்து இன்றுடன் பத்

—6ஆம் பக்கம் பார்க்க

ஆசிரிய சங்கம் மகிழ்ச்சி

## பெண் பட்டதாரிகளுக்கு வடக்கு கிழக்கில் நியமனம்

புதிதாக நியமிக்கப்படவிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களில் ஒரு பகுதியினரை குறிப்பாக பெண் ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் கல்விச்சேவை குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா, கல்விச் சேவைக் குழு செயலாளர் எம்.எச்.எச். ஆரியரத்தின ஆகிய இருவருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரி

.. 6 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## இளம் கலைஞர் நிகழ்ச்சி

ஈழத்தின் இளம் கலைஞர்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் அச்சுவேலி கலாதாரகை ஸ்தாபனத்தினர் மாதந்தோறும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற காட சியும், கானமும் போட்டி நிகழ்ச்சியில் அச்சுவேலி ஏ. விஜயநாதன், வதிரி தேவரையாளி ராஜதுரை குழுவினர், பருத்தித்துறை பாபு ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடத்தைப் பெற்றனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணிக்கு 'தேனிசை மழை' என்ற புது நிகழ்ச்சி அச்சுவேலி - வல்லையில் நடைபெறவுள்ளது.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

சுகாதார விழாவில் பேச்சு:

## உடல் நலமுள்ள மாணவன் சிறந்த கல்வியை பெறுவான்

"ஒரு மாணவன் பாடசாலை வாழ்க்கையில் பயன் அடைந்து சிறந்த கல்வியறிவைப் பெற வேண்டுமாயின் அவனது உடல் நலம் ஆரோக்கியமாக அமைய வேண்டும். எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கல்வியினுல் நற்பயனைப் பெற வேண்டுமானுல் அவர்களது உடல் நலத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்" இவ்வாறு புங்குடுதீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. ஆறுமுகம் கூறினுர்.

நெடுந்தீவு மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் முன்னுள் கிராம சபைத் தலைவர் திரு. ரீ. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற சுகாதார விழாவில் தொடர்ந்து பேசிய திரு. ஆறுமுகம், பிள்ளைகள் இவ்வாருக ஆரோக்கியமான உடல்நலத்தைப் பெற வேண்டுமெனின் சிறு வயது முதல் நற்பழக்கத்தைப் பழகிக் கொள்ள வேண்டும். அதற்கு போஷாக்கான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்றும் பிள்ளைகளுக்கு தேகப்பயிற்சி மிகவும் முக்கியமானது என்றும் சொன்னுர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ரீ. சந்திரசேகரம் பேசுகையில் போதைவஸ்துவினுல் ஏற்படும் தீமைகள் பற்றிக் குறிப்பிட்டார். ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி கதிர்காமத்தம்பி, மகாவித்தியாலய அதிபர் திரு. பீ. அன்ரனி ஆகியோரும் பேசினர்.

இவ் விழாவையொட்டி கட்டுரைப் போட்டி, கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.




✽ யாழ். ஜின்னு ரோட் அமீர் ஹம்ஸா - அஜமத்துல் நிஸா தம்பதியின் மகன் முகமது ஹாரீஸ் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✽ புத்தூர் கிழக்கு தம்பிராசா - ஞானசௌந்தரி தம்பதியின் யின் மகள் சுகனியா இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

✽ பளை இரத்தினசிங்கம் - கனகம்மா தம்பதியின் மகள் கேமிழா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✽ கிளிநொச்சி சதாசிவம் - மகேஸ்வரி தம்பதியின் மகன் புவனேஸ்வரன் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✽ பரந்தன் பாலேந்திரன் - ராஜேஸ்வரி தம்பதியின் மகன் பார்த்தீபன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளை கொண்டாடுகிறுர்.

✽ நவாலி வடக்கு பற்குணராஜா - ஜெபனேஸ்வரி தம்பதியின் மகன் பார்த்தீபன் இன்று தனது மூன்றுவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✽ அச்சுவேலி வடக்கு பாலசிங்கம் - மதிவதனு தம்பதியின் மகள் சுஜீதா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

✽ யாழ் - ராஜேந்திரா வீதி ஸ்ரனிஸ்லஸ் - பத்மா தம்பதியின் மகள் டிலோசினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறுர்.

✽ குருநகர் சிவராசா - மாகிறேற் தம்பதியின் மகள் மரீனு இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.


## B A - B. COMM வகுப்புகள்

✽ G. A. Q 1st in Comm பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான B.A., B. Comm Part I & II வகுப்புகள்.

✽ பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கான G. A. Q. 1st in Comm துரித மீட்டல் வகுப்புகள்.

**ஆரம்பம்: 1-12-85**

விபரங்களுக்கு :

**ASTAN INSTITUTE**

166/I, Hospital Road, Jaffna.


## எழுத்தாளர்கள் சங்க நிர்வாகிகள்

(கொழும்பு)

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடந்தது.

புறக்கோட்டை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மண்டபத்தில் இச்சங்கத்தின்பொதுச் செயலாளர் திரு. பிரேம்ஜி ஞானசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கொழும்புக் கிளையின் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

தலைவராக காவலூர் இராஜதுரையும், துணைத் தலைவர்களாக திருமதி அன்னலட்சுமி இராஜதுரை திரு. தெளிவத்தை ஜோசப், திரு. போ. இராசதுரை, ஆகியோர் தெரிவாகினர். ஏனைய தெரிவுகள் வருமாறு: செயலாளர்: லெ. முருகபூபதி, துணைச் செயலாளர்கள்: மேமன்கவி, சே. விஜயன், பொருளாளர்: ப. ஆப்டீன், துணைப் பொருளாளர்: புலோலியூர் இரத்தினவேலோன் இவர்களுடன் ஏழுபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## ஓய்வுபெற்றுர்

கரவெட்டி தபாற் கந்தோர் தபால் தரம் பிரிப்பாளராக கடமையாற்றிய திரு. க. சின்னையா தமது ஐம்பத்தெட்டாவது வயதில் ஓய்வுபெற்றுர்.

சிற்றூழியராக இங்கு சேர்ந்த இவர் படிப்படியாக பதவியுயர்வு பெற்று இந் நிலைக்கு வந்தார்.

## முகாம் மூடப்படும்?

(நெடுங்கேணி)

நெடுங்கேணியில் இயங்கும் செட்டிகுள அகதிகள் முகாமை மூடிவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது. இந்த முகாமில் ஆயிரத்து இருநூறு பேர் தங்கியுள்ளனர். இவர்களை மீண்டும் தத்தமது இடங்களுக்கு போகும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இந்த அகதிகள் தமது இருப்பிடங்களுக்கு போக மறுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வியாழன்று ஆரம்பம்

(சரசாலை)

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை (விநாயகர் விரதம்) எதிர் வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

வட்டுக்கோட்டை

## 28 மாணவர் சித்தி

(பண்டத்தரிப்பு)

ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்தில் 28 மாணவர்கள் சித்தி எய்தியுள்ளனர்.

இந்த 28 பேரில் 16 பேர் காரைநகர் பாடசாலைகளைச் சேர்ந்தவர்களாவர்.

காரைநகர் வாரிவளவு நல்லிணக்க சபையினர் தமது பிரதேச 16 மாணவர்கட்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் ஒன்றை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் நடத்த இணக்க சபைச் செயலாளர் திரு. எம். பத்மநாதன்நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## புதிய குழு நியமனம்

நல்லூர் தெற்கு சுகாதாரக் குழு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது, அதன் நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவானுர்கள். தலைவர் திரு. த. சோமசுந்தரம், உப-தலைவர் திரு. நா கிருஷ்ணனந்தன், செயலாளர் திரு ச. கருணைநாதன் ஜே.பி., உப-செயலாளர் திரு. ஆ. சண்முகலிங்கம், பொருளாளர் திரு. கா. இரகுநாதன்.

ஏழு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## ஓராண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு பேரானந்தம் (அப்பன்)**

ஆண்டவன் படைப்பு; 08-08-1953
ஆள்பவன் பறிப்பு: 09-12-1984

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எல்லோர்களது இதயத்திலும் சிரித்த முகத்துடன் குடிகொண்டிருந்த உங்களை எம்மைவிட்டு பிரிப்பதற்கு காலனுக்கு எப்படித் தான் மனம் வந்ததோ!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா, அண்ணர், அக்காமார், தங்கை, அத்தான், அண்ணி, மருமக்கள், உற்றுர், உறவினர்கள்.

ஸ்ரீ வாகீஸ்வரி, வீதி,
கொண்டாவில் வடக்கு.


## வரி விளம்பரம்

### வாடகைக்கு

வீடியோ / றேடியோ வாச்ரிப்பயர் போன்ற வியாபாரத்திற்குகந்த இடம் உடன் வாடகைக்குண்டு. தொடர்பு-மல்ரி சேவிசஸ், 37(351) மணிக்கூட்டுவீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம்.

### தேவை

கரம்பன் மேற்கு முருகமூர்த்தி கோவிலிற்கு நிரந்தரமாக பூசைகள் செய்வதற்கும் பராபரிப்பதற்கும் ஒரு பட்டதாரிக் குருக்கள் உடன் தேவை மாதச்சம்பளம், வசிப்பதற்கு வீடும் கொடுக்கப்படும், கோவில் வரும்படியும் உண்டு. தொடர்பு: சோ. பாலகிருஷ்ணன், தபாற்கந்தோர் அருகாமை, தெல்லிப்பளை.


## மரண அறிவித்தல்

**T. P. J. துரைசிங்கம்** (முன்னுள் கிளை முகாமையாளர், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், த பினன்ஸ் கொம்பனி, எயிற்கன் ஸ்பென்ஸ்- காப்புறுதி) காலமாகிவிட்டார். இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், றெகான் (U. K.), ஜெகான் (பாரேன்), டிலான் (கனடா), மகான் (U. K.), ஹிரான் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னுரின் பூதவுடல் இன்று (28-11-85) காலை 9-00 மணியளவில், 22, கண்டி வீதியிலிருந்து நல்லடக்கத்திற்காக அச்சுவேலி குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

## அறிவித்தல்

ஈராக் பிரயாணத்திற்காக என்னிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள் அல்லது புதிதாக ஜெட்டா செல்ல விரும்புபவர்கள் இருந்தால் நேரில் என்னை சந்திக்கவும் மேல் விபரம் நேரில்.

**A. மகேந்திரன்**

155, குருசோவீதி, யாழ்ப்பாணம்.

### ஜெபநேசன் அடிகளார் பேச்சு

# காலத்துக்கேற்ற மாறுதல் செய்தல் சாலச்சிறந்ததே

(குருநகர்)

"சென்:ரேக் சனசமூக நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதுபோல் மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கமும் சிறப்பாகச் செயல்பட்டு வர வேண்டும். இன்று ஆரம்பித்து இருக்கின்ற தொழிற்பயிற்சிகள் மூலம் பெண்கள் பலர் சிறுகைத்தொழில் பயிற்சிகளைப் பெறமுடியும். இன்றைய காலகட்டத்தில் நமது தேவைகளை நாமே முன்னின்று பூர்த்தி செய்ய வேண்டிய தேவை உண்டு. அதனால் நமது சுற்றாடல் தேவைகளை நாமே நிறைவேற்றுவதுடன் எங்கெங்கு மாற்றங்கள் தேவையோ அவைகளைச் சீர்திருத்துவதில் முனைப்பாக செயல்பட வேண்டும்."

யாழ்-சென்: ரேக் சனசமூக நிலைய மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத் தொழிற்பயிற்சி நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து தலைமையுரை நிகழ்த்திய மேற்றிராசன பங்குத்தந்தை வணபிதா ஜெபநேசன் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வரவேற்புரையை செல்வி ரேணுகா ஞானப்பிரகாசம் நிகழ்த்தினார். திரு. வி. எம். ஜெரூட் ஆரம்ப உரை நிகழ்த்துகையில் பல ஆண்டுகளாக இப்பயிற்சியில் ஈடுபட்டுவரும் கிராமிய மகளிர் சங்கம் தொழிற் பயிற்சியுடன் நின்று விடாது இன்றுள்ள நிலைமைகளை அறிந்து பொதுப் பணியிலும் ஈடுபட வேண்டும். வீட்டினுள் பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார் என்னும் வகையில் தான் வாழ்கின்ற பகுதிகளிலும் சமூகப் பணி, சமயப்பணி என்பவற்றைச் செய்ய வீட்டில் முடங்கி இராமல் பெண்கள் வெளியே இறங்க முன்வரவேண்டும்" என்றார்.

சங். சகோதரி திரேசா, தொழிலதிபர் திரு. க. அன்ரன் ஆகியோரும் கலந்து உரைநிகழ்த்தினர். செல்வி சுகுணு தம்பித்துரை நன்றி கூறினார்

### காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மீது

# பரு.நீதிமன்றத்தில்நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல்

(புலோலி)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் தீயினால் ஏற்படும் அழிவுகளுக்கு எதிராகச் செய்துகொள்ளப்பட்ட காப்புறுதிக்கு அமைய உரிய நஷ்டஈட்டுத் தொகையைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கத் தவறிவிட்டதாக குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறை வர்த்தகரொருவர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பருத்தித்துறை நியூ கொழும்பு ஸ்டோர்ஸ் உரிமையாளரான திரு. எஸ். சிவராமலிங்கம் என்பவரே கூட்டுத்தாபனத்திடமிருந்து தனது காப்புறுதியின்படி ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடாகச் செலுத்துமாறு தீர்ப்பளிக்கக்கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளவராவார்.

வழக்காளி 30-3-84 முதல் 30-5-85 வரையிலான காலப் பகுதியில் அமுலில் இருந்த காப்புறுதியைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றிருந்தார் என்றும் அதன்படி கூட்டுத்தாபனம் தீயின் அழிவால் ஏற்படும் நட்டங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா வழங்க பொறுப்பேற்றதாகவும் வழக்காளி குறிப்பிட்டுள்ளார்,

1984 செப்டம்பர் முதற் திகதி நியூ கொழும்பு ஸ்டோர்ஸில் ஏற்பட்ட தீயினால் காப்புறுதி செய்யப்பட்ட பொருட்களின் ஒரு பகுதி அழிக்கப்பட்டதாயும், அவற்றின் மதிப்பு ஒரு இலட்சம் ரூபா எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்திற்கு இத்தீயினால் ஏற்பட்ட அழிவுகுறித்து அறிவிக்கப்பட்டும், காப்புறுதியின்படி நஷ்டஈடு கொடுக்கப்படாததால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் மூலம் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஒரு லட்சம் ரூபா, 1984 செப்டம்பர் 1ம் திகதியிலிருந்து முழுத் தொகையும் செலுத்தப்படும் வரையும் சட்டரீதியான வட்டியையும், வழக்குச் செலவுத் தொகை உட்பட வேறு நிவாரணங்களையும் வழங்கவேண்டுமென வழக்காளி கோரியுள்ளார்.

இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரீ. யோகநாதன் முன்னிலையில் ஜன. 20ம் திகதி அன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவுள்ளது. வழக்காளி சார்பில் சட்டத்தரணி ஆர். சதானந்தனின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஜி. எவ். சேதுகாவலர், சட்டத்தரணி ஆர் உருத்திரா ஆகியோர் ஆஜராகின்றனர்.


## நிருபர்கள் தேவை

காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, தெல்லிப்பளை, சுன்னுகம், அளவெட்டி, உரும்பராய், கோண்டாவில், அராலி, வசாவிளான், புத்தூர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மண்டைதீவு, நெல்லியடி, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் ஈழமுரசு நிருபர்களாக கடமையாற்ற அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். 30-11-85 வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.


### நீர்வேலி வித்தியாலய விழாவில் பேச்சு:

# ஆங்கிலத்தின் அவசியம் பெற்றோர், ஆசிரியரால் மாணவர்க்கு உணர்த்தப்பட வேண்டும்

(நீர்வேலி)

"நாம் நமது சுயபாஷையாகிய தமிழ் மொழியிலேயே ஆர்வம் கொண்டுள்ளோம். சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் பற்றிய விருப்பு எம்மிடம் குறைவடைந்துள்ளது. இம்மொழியை ஆசிரியர்கள் மாணவரிற்கு கற்பிக்கும் போது இருவழிகளைக்கையாள வேண்டும். அவையாவன அகஊக்கி, புறஊக்கி, அகஊக்கி என்றால் மாணவனை அவன் மகிழ்வடைந்து ஒரு நிலைப்பாட்டை பின்பற்ற உதவுதல், புறஊக்கி என்பது மாணவர்களை கேட்டல், பேச்சு, எழுத்து வாசிப்பு போன்றவற்றில் ஊக்குவித்தலாகும்."

இவ்வாறு நீர்வேலி இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கில மன்ற அங்குரார்ப்பண விழாவில் உரையாற்றிய ஆங்கில ஆசிரியர் திரு. பொ. மகாதேவா குறிப்பிட்டார்.

தலைமை வகித்த கல்லூரி அதிபர். திரு. கு. சண்முகநாதன் தனது உரையில், "தரம் குறைந்து காணப்படும் ஆங்கிலக் கல்வி மேன்மையடையவும். மாணவர்கள் அதன் தரமுணர்ந்து கற்கவும் பெற்றோரும், ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக அமைய வேண்டும். மற்றும் மாணவர்களின் உள்ளக்கிடக்கை, ஆற்றல்போன்றவற்றை ஆசிரியர் குழாம் அறிந்து கொள்ள இப்படியான மன்றங்கள் உறுதுணை புரியும்" என்றார்.

ஆங்கிலஆசிரியர் திரு. பொ. மகாதேவா தனது உரையில், "பல மாணவர்கள் ஆங்கிலம் படிக்க ஆர்வம் கொண்டுள்ளனராயினும், அவர்களை பெற்றோரும், ஆசிரியர்களும் ஊக்குவிக்க முயற்சி எடுக்காமை, இப்படியான நிலைமாறி, அனைவரும் ஒன்று பட்டு ஆங்கிலக் கல்வியின் அவசியம் அறிந்து அவ்வப்போது மாணவரிற்கு அறிவு புகட்டல் வேண்டும்" என்றும் கூறினார்.

அடுத்து முன்னாள் பாடசாலை அபிவிருத்துச் சங்க செயலாளர் திரு. வே. சின்னத்தம்பி, பாடசாலை முன்னாள் அதிபர் திரு. ம.க நடராஜா ஆகியோரும் உரையாற்றினர். கல்லூரி ஆசிரியை திருமதி. பூ. கந்தசாமி நன்றியுரை நிகழ்த்தினார்.

# பரீட்சை வேதனம் அதிகரிப்பு

(புங்குடுதீவு)

க. பொ. த. (சா. த.) பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு இம்முறை வேதனம் அதிகரிக்கப்பட்டுள்ளது

பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு நாளொன்றுக்கு 75 ரூபாவும், நிரந்தர நோக்குநருக்கு 60 ரூபாவும், சாதாரண நோக்குநருக்கு 50 ரூபாவும், உதவியாளருக்கு 40 ரூபாவும் வழங்கப்படும்.

பரீட்சைஅத்தியட்சகர் ஜனாப் இப்ராகிம் இத்தகவலைத் தெரிவித்தார்.

### கல்வியதிகாரி கவலை

# தகுந்த உடற்பயிற்சியின்றி மாணவர் நடையில் சோர்வு

(உடுவில்)

"யாழ். மாவட்டப் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் இன்றைய காலகட்டம் பலபல சோதனைகளை அனுபவித்துக் கொண்டும், எதிர் நோக்கிய வண்ணமுமிருக்கின்றது. பாடசாலைகளில் வருடாந்தப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கின்ற வேளையில் இப்படிப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியமைக்கு முதலில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றி கூறவேண்டியது அவசியம்" என்று சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு அண்மையில் மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அணி நடை, வலைப்பந்தாட்டப் போட்டி ஆகியவற்றிற்குத் தலைமை வகித்துப் பேசிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச தனஞ்செயன் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உடற்பயிற்சி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. கணேசலிங்கம் தனதுரையில்:- "மாணவர்கள் புத்தகப் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தாமல் உடற் பயிற்சிக் கல்வியிலும் அக்கறை காட்ட வேண்டியது அவசியம். இன்று பாடசாலைகளிலும், தெருக்களிலும் மாணவர்கள் நடக்கும் போது பார்த்தால் அவர்களிடம் சோர்வுதான் காணப்படுகின்றது. எனவே உறுதியான சரீரத்தைப் பெறுவதற்கு இது போன்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வது சாலச் சிறந்ததாகும்" என்றார்.

அணி நடைப் போட்டியிலும், வலைப்பந்துப் போட்டியிலும் பின்வரும் பாடசாலைகள் வெற்றியீட்டின. அணிநடைப் போட்டி:- முறையே இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை வலைப்பந்துப் போட்டி:- முறையே உடுவில் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி.

# அபிவிருத்தி ஏற்படுவதற்கு மக்கள் ஒத்துழைப்பு தேவை

(புலோலி)

"சோலைவரி நிலுவை, மின்சார நிலுவை என்பனவற்றை செலுத்துவதற்கும், சட்ட விரோத மின்பாவனையைத் தடைசெய்வதற்கும் பொது மக்கள் பூரண ஒத்துழைப்பும். உதவிகளும் வழங்க வேணடும். அப்போதுதான் உடுப்பிட்டி உப அலுவலகப் பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைளை மேற்கொள்ள முடியும். இக்கிராமப் பகுதிகளின் அபிவிருத்திகள் இக்கிராமங்களில் வாழும் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது".

இவ்வாறு, யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உடுப்பிட்டி உப - அலுவலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. என். பேராசிரியன் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உடுப்பிட்டி உப-அலுவலகப் பகுதியிலுள்ள பொதுசன நிறுவனங்களின் அங்கத்தவர்கள், சமூகத் தொண்டர்கள், கிராம சேவை அலுவலர்கள்ஆகியோர்கலந்து கொண்டனர்

தொடர்ந்து உரையாற்றிய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு பேராசிரியன் குறிப்பிட்டதாவது: "சட்டவிரோத மின்பாவனையால், மின்பாவனையாளர்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகி வருவதுடன், உயிராபத்துக்களும் ஏற்படுகின்றன. வரியிறுப்பாளர்கள் சோலைவரி நிலுவைகளை செலுத்தாமல் இருப்பதனாலும், மின்பாவனையாளர் மின் நிலுவைகளைச் செலுத்தாமல் இருப்பதனாலும் உப-அலுவலகம் சிறப்பாக இயங்கி, அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பது கவலைக்குரியதாகும் இக்குறைபாடுகளை நீக்குவது பொதுமக்களாகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு பொதுமக்களாகிய நீங்கள் செயற்படவேண்டியது முக்கியமாகும்.

உப-அலுவலக பிரதம இலிகிதர் திரு. வ வேலாயுதம் உரையாற்றுகையில் மேற்படி கருத்துக்களை வற்புறுத்தினார்.

உப - அலுவலக மின்பகுதி இலிகிதர் திரு. வ. ஸ்ரீஸ்கந்தராஜாவும் உரையாற்றினார் சபையோரும் தமது கருத்துக்களை எடுத்துக் கூறியதுடன் குறைபாடுகளை நீக்க தாங்கள் போதிய ஒத்துழைப்புக்களை வழங்குவதாக உறுதியளித்தனர்.

# சட்ட விரோத மின்பாவனைக்கு தடை

(நெடுங்கேணி)

இப்பகுதியில் சட்ட விரோத மின்சார பாவனையை சில இளைஞர்கள் தடுத்து வருகின்றனர். அண்மையில் இங்கு ஒருவர் சட்ட விரோத மின்சாரம் பெறும் போது மரணமானதால் இவ்வாறு அவர்கள் செய்து வருகின்றனர்.

# சுகாதார விழா

(நெடுந்தீவ)

நெடுந்தீவு பகுதி பாடசாலைகளில் தேசிய சுகாதார விழா நெடுந்தீவு மகா வித்தியாலத்தில் அண்மையில் நடைபெற்றது. திரு. பி எம். ஜே, அன்ரனி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. கே. ஈ. ஆறுமுகம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சந்திரசேகர், காவலூர் வைத்திய கலாநிதி செல்வி. கதிர்காமத்தம்பி ஆகியோர் சிறப்புரையாற்றினர்

# புதிய சட்டத்தரணி

ஊர்காவற்றுறை கிழக்கைச் சேர்ந்த செல்வி ஜொய்ஸ் அஞ்சலா ஒகஸ்டீன் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆர். எஸ். வணசுந்தர, பி. கொலின் தே மி, ஈ. ஏ டி அத்துகொரளை ஆகியோர் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைப் பட்டதாரியும், கொட்டாஞ்சேனை நல்லாயன் பாடசாலையின் பழைய மாணவியுமான இவர் இலங்கை மத்திய வங்கியில் நீண்ட காலமாகச் சேவையாற்றுபவரும், மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கத்தின் தலைவருமான திரு. எம். ஜீ. ஒகஸ்டீன், திருமதி சந்திரா ஒகஸ்டீன் அவர்களின் புதல்வியுமாவார்.

### உதய சிந்தனை

சோம்பல் உள்ளவன் இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம் போன்றவன். அத்தகைய கடிகாரம் ஓடினுல் என்ன? நின்ருல் என்ன?

—எகிப்தியபழமொழி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

28-11-85 வியாழக்கிழமை (குரோதன கார்த்திகை-13)

# நினைத்தால் முடியும்; நினைக்க வைப்பது யார்?

உலகின் மிகப் பிரபல்யம் வாய்ந்த அரசியல் தலைவர்களில் ஒருவராக பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இன்று விளங்கி வருகின்ருர்.

வயதில் மிகக் குறைந்த உலகத் தலைவரான ராஜீவ், பேச்சைக் குறைத்து செயலில் தமது திறமையைக்காட்டி வருவதே இதற்குக் காரணம்.

தெரிவு செய்யப்பட்ட பிரதமர் பதவியை ஏற்று ஒரு வருடம் கூட இன்னமும் முற்றுப் பெறவில்லை. ஆனுல் அதற்கிடையில் அவர் மேற்கொண்ட திடமான செயற்பாடுகள் அவரின் பெயரை வரலாற்றுப் பதிவேடுகளில் பதிவு செய்ய வைத்துள்ளன.

அமெரிக்கா, சோவியத்துக்கு இணையாக இந்தியாவைத் தன்னிகரில்லா வல்லரசாகப் பூகோளத்தில் இடம்பெறச் செய்து வரும் பெருமை ராஜீவையே சாரும்.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களுடன் நட்பு ரீதியான பேச்சுவார்த்தைகளை நடத்திஞராயினும், எதற்கும் வளைந்து, விட்டுக் கொடுக்கவில்லை.

''அமெரிக்காவுக்கு விஜயம் செய்தமைக்காக சோவியத்தின் நீண்ட காலத் தோழமையை உதறிவிட்டதாகக் கருதக்கூடாது'' என்று பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்து, அமெரிக்காவையே திணறடிக்கச் செய்துள்ளார் ராஜீவ்.

பாகிஸ்தானின் அணுகுண்டு தயாரிப்பு நடவடிக்கைகளையும், அதற்கு அமெரிக்கா வழங்கிவரும் ஆதரவையும் அடிக்கடி அம்பலத்துக்குக் கொண்டு வந்த வேளையிலும், அயல் நாடான பாகிஸ்தானுடன் நட்புறவை வளர்க்க விரும்பி, அதன் ஜனதிபதி ஸியாவை இந்தியாவுக்கு அழைத்துள்ளதன் மூலம் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளார் ராஜீவ்.

இரண்டு தசாப்தங்களாக பாரதப் பிரதமர் பதவியை வகித்த அரசியல் அனுபவசாலி இந்திரா காந்தியினுல்கூட தீர்க்க முடியாது போன பஞ்சாப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்து, தேர்தலும் நடத்தி முடித்த அசகாயசூரன் ராஜீவ்.

சர்வதேச மாநாடுகளின் இந்தியாவின் நடுநிலைக் கொள்கையையும், வெளியுறவுக் கொள்கையையும் எவருக்கும் பயமின்றிக் கூறி அனைவரதும் பாராட்டையும் பெற்று வருகிருர் இவர்.

தென்னுபிரிக்க நிறவெறி ஆட்சிக்கெதிராக முதற் போர்க் குரல் கொடுத்தவரும் இதே ராஜீவ்தான்.

ராஜீவின் போக்கு எப்படியிருந்த போதிலும், அவருக்கு எதிராக நிற்க முடியாது அவருடன் நட்பு வைக்கவே அமெரிக்காவும், பாகிஸ்தானும், பிரிட்டனும், சீனுவும், யப்பானும், இலங்கையும் தம்மாலான முழு முயற்சிகளையும் எடுத்து வருகின்றன என்பது பகிரங்க ரகஸியம்.

இவ்வாருக அனைவரதும் அன்புக்கும் நட்புக்கும் பாத்திரமாக விளங்கி, உள்நாட்டு, வெளிநாட்டு, அயல்நாட்டு விவகாரங்களில் வெற்றிக்குமேல் வெற்றியடைந்துவரும் பாரதப் பிரதமர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மட்டும் ஸ்திரமான ஒரு நிலைப்பாட்டுக்கு வரமுடியாமல் தத்தளிப்பது எதற்காக?

தமிழீழம் கேட்கும் ஈழத்தமிழர்களுக்கு ஆகக்குறைந்தது வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சுயாட்சியாவது வழங்கக் கூடாதா?

இந்தியாவிலுள்ள மாநில சுயாட்சிஅமைப்பை வழங்குமாறு இலங்கை அரசிடம் கேட்டால் யாராவது தவறென்று கூறி விடுவார்களா?

இந்திய அரசியலமைப்பில் நடைமுறைப்படுத்தப்படும் மாநில அரசிஞல், மத்திய அரசுக்கு ஆபத்து ஏற்பட இடமில்லையே!

அமைச்சர் தொண்டமான் எமது பத்திரிகைக்கு நேற்று அளித்த பேட்டியில் குறிப்பிட்டது போல, இந்தியா நினைத்தால் இது முடியும்; நிச்சயம் முடியும்.

நினைக்க வைப்பது யார்? தமிழகம்தான் முயற்சி எடுக்க வேண்டும்.

★ 'இந்தியா ருடே' கட்டுரையின் தொடர்ச்சி

# ஜனதிபதி ஒரே நேரத்தில் இரு குதிரைகளில் அமர்ந்து சவாரி செய்கின்ருர்

மகாவலித் திட்ட அமுலாக்கத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களின் தொழிற்பாடு, மனத்தெம்பு ஆகியவற்றை வன்முறைகளும் பாதகமாகப் பாதித்துள்ளன. மகாவலித் திட்டத்திற்குரிய கிழக்குப் பிராந்தியத்தின் கண் உள்ள 'பி'-ஒழுங்கமைப்பின் வாய்க்கால்களில் அநேக தவறுகள் காணப்படுவதாகச் சென்ற மாதம் அறிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட சிரேட்ட பொறிவல்லுநர் எவர் ஒருவராவது, அவ்வொழுங்கமைப்பைச் சென்று பரிசோதிப்பதன் வாயிலாக, தமக்கு உயிராபத்தை வருவித்துக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. ஆற்றெருணுது, ஈற்றில் அரசு என்ன செய்ய வேண்டியதாயிற்று? அவ்வாய்க்காலின் நிழற்படத் தொடர் ஒன்றை அந்த என்ஜினியர்களிடம் அரசு சமர்ப்பித்தது. அவற்றைப் பார்த்து நிலைமையை அறிந்து கொண்ட என்ஜினியர்கள், அவற்றை ஆதாரமாகக் கொண்டு பரிகார நடவடிக்கைகளைச் சிபார்சு செய்ய வேண்டியோர் ஆயினர்.

நவீன விஞ்ஞானப் புனைகதைகளில் 'ஃபிரூங்கின்ஸ்டீன்' எனும் ஒரு செயற்கை இராட்சத மனிதனைக் காணலாம். அதீத உருவும், பருமனும், பலமும், ஆற்றலும் வாய்ந்த அவனைக் குண்டுகள், துப்பாக்கி ரவைகள் போல்வன ஒன்றும் செய்து விடமாட்டா. இன்றைய இலங்கையின் இனப் பிணக்கை இந்த 'ஃபிரூங்கின்ஸ்டீ'னுக்கு ஒப்பிடலாம். இதன் இரத்த தாகமும் பணத் தாகமும் தணிக்க முடியாதன இத்தீவு அரசினுல் இத்தாகங்களுக்கு ஈடு கொடுக்க முடியாது. வேறெங்கும் போல, ஜெயவர்தன அமைச்சரவையிலும் கடும் பிடியாளர்கள் இருக்கத்தான் செய்கின்றனராயினும், அங்கும் பல வட்டாரங்களில் யதார்த்த உணர்வுகள் எழ ஆரம்பித்துள்ளன. முதன் முதற் தடவையாக, இப்பிரச்சினைக்கு ஓர் இராணுவத் தீர்வு கிடையாது என அதிகாரிகள் ஒப்புக் கொள்கின்றனர். 'காலகதியில் இராணுவ ரீதியாக இவற்றுக்கெல்லாம் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். ஆனுல் அதன் விளைவான நட்டங்களை யார் பொறுப்பது?' என வினுத் தொடுக்கிருர் போர்-வணிகர் எனத் தமிழராற் கருதப்படும் பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலி.

இலங்கை அரசாங்கத்திஞற் பின்பற்றப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளிஞல் ஏற்படும் பிரமாண்ட அளவிலான செலவினத்திலும் தானும் பார்க்க, அவை பயன் தர வல்லனவா என்பதையிட்டுக் கூட சிரேட்ட இராணுவ ('கொமான்டேர்ஸ்') ஏவுநர்களிடம் இன்று சந்தேகம் எழுந்துள்ளது. 'உண்மையில் இராணுவ சரித்திரம் அல்லது வரலாற்றைத் துருவி ஆராய்ந்தோமாயின், கடும் இராணுவ நடவடிக்கைகளையிட்டு நாம் உற்சாகம் அடையக்கூடிய சந்தர்ப்பங்கள் எவற்றையேனும் அங்கு காணமாட்டோம். பொதுமக்களின் ஆதரவும் அபிமானமும் முழுமையாகப் பெற்ற பின்னணியை உடைய கிளர்ச்சி எதனையும், அரச துருப்புகளால் அழிக்க முடிந்ததாக உலகில் எங்கேயாவது காண முடியாது

'மலாயா இதற்கு ஒரு விதிவிலக்கு, அதுவும் அல்லாமல், அது வேறுபட்ட ஒரு விடயம். பிரிட்டிஷார் யாரோ வேருெருவருடைய தேசத்தில் சண்டையிட்டுக் கொண்டு இருந்தனர். பிரித்தானியர் அங்கு பிரயோகித்த நடவடிக்கைகள் மனித உரிமைகளைத் துச்சமாக மதிக்கும் தன்மையினவாக இருந்தன. ('அம்னெஸ்ரி இன்ரர்நஷனல்') சர்வதேச மனித உரிமைகள் சபை அந்நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தால் சபையினருக்கு இருதயத் தாக்கம் விளைந்திருக்கும்.

இலங்கை அரசாங்கத்திலுள்ள நாம், பிரித்தானியர் மலாயாவில் அனுசரித்த இராணுவக் கொள்கைகளை இலங்கைத் தீவிற் பின்பற்றும் அளவிற்கு அரசியல் ஆற்றலோ இராணுவ

ஆறும் பாகம்

ஆற்றலோ உடையவர்கள் அல்ல. ஆகையால், இங்ஙனமாக இங்கு எம்முன் உள்ள சிக்கலினின்றும் விடுபடுவற்கு, மாநாட்டுமேசைவழிமாத்திரம் தான் ஒரு தீர்வைத் தரும்' இவ்வாறு பகுப்பாய்வு சகிதம் விதந்துரைப்பவர் (சிபார்சு செய்பவர்) இலங்கையின் ஒரு சிரேட்ட இராணுவ அதிகாரி; இந்திய மாதுகாப்பு உயர் கலாசலை ஒன்றிற் கல்வி பயின்றவர்.

இலங்கை அரச படைகள் வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ள பணி சாத்தியமானதல்ல என்பதை அவர்கள் நன்கு உணர்கின்றனர். இத்தீவின் கிழக்கில் ஒருவேளை அவர்கள் இன்னமும் உயிர் பிழைக்கக்கூடும். ஆனுல் வடக்கில் அது யாருமறியாத்தரை. அங்கு வெற்றி வாய்ப்புப் பார்க்க அவர்களுக்கு மனம் வராது. ஏரணியாக, பக்கபலத்துடன் பட்டப்பகலிற்தானும் முகாமைவிட்டு வெளியிறங்க அரசபடையினர் விரும்புவதில்லை. கூர்ந்த தந்திரசாலியான ஜனதிபதி ஜெயவர்த்தன இதனை அறியாதவரல்ல எண்ணிறந்த பொதுக்கூட்டங்களில் இதனை விளக்கிக்கூற அவர் முயன்று வந்துள்ளார்.

இருந்தாலும் ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்குப் பிரச்சினைகள் உண்டுதான். பொதுவான சிங்கள மக்கள் மத்தியில் போரார்வம் பலமாக உண்டு. இலங்கைத்தீவின் பாதுகாப்பான தென் பாகம் பிணக்குகள், மோதல்கள் நிறைந்த பிராந்தியங்களினின்றும் நன்கு பிரித்துப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவேதான் இந்தப் பலத்தயுத்த மோகம் தமிழர் விடுதலைப் போராளிகளுடன் அரசாங்கம் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்ருற்கூட இத்தகைய சிங்களவரினுல் சரணுகதி எனக் கருதப்படுகிறது சிங்களவரிற் பெரும்பாலானவர்கள், இராணுவ ரீதியாகத் தமிழர் கையாளப்படுவதையே விரும்புகின்றனர், இவ்வுணர்ச்சியை கே. விக்கிரமநாயக்க எனும் புகைவண்டித் திணைக்கள அலுவலர் பின்வரும் வார்த்தைகளில் விபரிக்கிருர். '' தமிழர்களானேர் எமது அனுதாபத்திற்குச் சிறிதேனும் அருகதையற்றவர்கள். தமிழர் விடுதலைப் புலிகளினுற்' கொல்லப்பட்ட பொலிசாரிற் பெருந்தொகையானேர் தமிழராக இருந்துங் கூட, அவர்கள் அரசாங்கத்திற்கு உதவுவதில்லை. இப்புலிகளுக்கும் 'சுலாஷ்னிகோவ்' மொழி விளங்கும். ஒரு நல்ல அரசாங்கம் அவர்களுக்கு அதனைக் கொடுக்கப் பின்வாங்கி நிற்றலாகாது. அதனை விடுத்து ஜெயவர்த்தன எப்படிச் செயற்பட முற்பட்டிருக்கிருர்? இப்பொழுது, பேரம் பேசும் வாய்ப்பு ஏற்றமாக உள்ளது. பிரிவினைவாதிகனின் கையிலேயே தவிர, ஜெயவர்த்தனவின் கையிலல்ல. இத்தறுவாயில் அவர் பேச்சுக்களில் இறங்கியுள்ளார்.'

ஜனதிபதி ஜெயவர்த்தன மிக மிகச் சாவதானமாகச் செயலாறுகிருர். தற்போது, ஒரே சமயத்தில் குதிரைகள் இரண்டின்மீது அவர் சவாரி செய்ய வேண்டியவராக இருக்கிருர். ஒரு புறம் நம்பவைக்குமளவிற்குத் தான் ஒரு சமாதானம் விரும்பியெனப் பாரதத்திற்குத் தம்மைக் காட்டிக் கொள்ளவேண்டியிருக்கும். அவர், மறுபுறம். சிங்களக் கடும்பிடியாளர் பார்வையில், தான் தொடர்ந்தும் 'போருக்குத் தயார்' நிலைப்பாடு மேற்கொள்பவராகப் படவேண்டியவராகவும் இருக்கிருர். இந்திய நெருக்குதல்களுக்கு ஆளாகித்தான் சலுகைகள் விட்டுக் கொடுக்கிருர் என்பதைத் திரும்பத் திரும்ப மறுத்துக்கூற அவர் எடுத்துக்கொள்ளும் பிரயாசை கொஞ்சமல்ல. 'நெருக்குதல் மேற்கொள்ளும் அளவிற்குப் பெரிய ஒரு தேசமாக இலங்கை இல்லாதிருக்கலாம். ஆனுல் அதேவேளை' பந்தாடப்படும் அளவிற்குச் சிறிய ஒரு நாடுமல்ல அது' என இருவார

— 5ம் பக்கம் பார்க்க

★ மத்திய அரசின் உத்தரவையடுத்து அதிருப்தி

# ஹிந்திமொழித் திணிப்பை எதிர்த்து ஆளும் கட்சி

# தி. மு. க. போர்க் கொடி!

(சென்னை)

தமிழ்நாடு உட்பட ஏனைய மாநிலங்களில் மத்திய அரசினால் ஹிந்தி மொழி திணிக்கப்படுவதை எதிர்த்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் போர்க்கொடி தூக்கியுள்ளன. ஆளும் கட்சி இது விடயத்தில் காட்டும் எதிர்ப்பாக முதலமைச்சர் திரு, எம், ஜி. இராமச்சந்திரன் சார்பில் கட்சிப் பொதுச் செயலாளர் திரு, எஸ். ராகவானந்தமும், தி. மு. க. சார்பில் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதியும் சென்னையில் தனித்தனி கண்டன அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறும் சகல அமைப்புளும் தமது அன்றாடக் கடமைகளில், ஹிந்தி



மொழியையும பாவிககவேண்டும் என்ற மத்திய அரசின் உத்தரவே இக்கண்டனத்தைத் தோற்றுவித்துள்ளது.

பண்டித நேரும், அன்னை இந்திரா காந்தியும் அளித்த வாக்குறுதிகளை இதுமீறுவதாக உள்ளது என்று இக் கண்டனத்தில் தெரிவிக்சப்பட்டுள்ளது.

மேற்படி இரு கட்சிகளினதும் உறுப்பினர்கள் ராஜ்ய சபையில் இது விடயமாகப் பலத்த ஆட்சேபம் எழுப்பினர்.

அ. இ. அ. தி. மு. க. எம். பி. திரு பி. மோகனரங்கம் சபையில் பேசுகையில், ''இச் சுற்றறிக்கை மத்திய அரசினால் உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும்'' என்று வற்புறுத்தினர்.

தி மு. க. எம். பி. திரு. கோபாலசாமி பேசுகையில், பண்டித நேரு, இந்திரா காந்தி அம்மையார் ஆகியோர் மாநிலங்களில் ஹிந்திமொழி பலவந்தமாகத் திணிக்கப்படமாட்டாது என முன்னர் வாக்குறுதியளித்திருந்தனர். இப்புதிய உத்தரவு அவ்வாக் குறிதியை மீறுவதாக உள்ளது.



குறிப்பிட்ட வாக்குறுதி காப்பாற்றப்படும் என்ற உறுதிமொழி அளிக்கப்பட வேண்டும்'' என்று கூறினர்-

சீக்கியத் தீவிரவாதிகள்

## பாரத ராஜதந்திரிகள் மீது பாகிஸ்தானில் தாக்குதல்!

(லாகூர்)

பாகிஸ்தானில் சீக்கியர்குழு ஒன்று பாரத அரசு ராஜதந்திரிகளைத் தாக்கிக் காயம் விளைவித்துள்தாக அறிவிக்கப்படுகிறது.

கனடாவிருந்து வந்த எட்டு சீக்கியர்கள் பாரத கவுன்ஸிலர் திரு. ஜெயனையும், முதலாவது செயலாளர் திரு. கன்னாவையும் தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து உடன் விசாரணை நடத்துமாறு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

சீக்கிய மதத் தலைவர் குருநாத்தேவின் உற்சவத்தில் கலந்து கொள்ள பாரதத்திலிருந்து வந்திருந்த யாத்திரிகர்களை பிரஸ்தாப அதிகாரிகள் ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கையிலேயே தாக்கப்பட்டனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## பிரான்ஸ் அணுக்குண்டு வெடிப்பு நியூஸிலாந்து தகவல்

(பாரிஸ்)

தென் பசுபிக் கடலில் பிரான்ஸ் ஐம்பது கிலோ கிறும் எடையுள்ள அணுகுண்டு ஒன்றை வெடிக்க வைத்துள்ளதாக நேற்று நியுஸிலாந்து விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

கடந்த மே மாதம் எட்டாம் திகதி பிரான்ஸ் எழுபது கிலோ கிறூமுக்குக் கூடுதல் எடையுள்ள அணுகுண்டை வெடிக்க வைத்திருந்தளர்.

அணுகுண்டுப் பரிசோதனைகளை பிரான்ஸ் பத்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தது.

அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து ஆகியன பிரான்ஸின் இச்செயலைக் கண்டித்து வருகின்றன.

ஆயினும் தான் இதனைக் காலவரையின்றி நடத்தப்போவதாகப் பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ...

4ஆம் பக்கத் தொடர்

ங்களுள் பல்கலைக்கழகத் தலைமைப் பேருரையொன்றின் போது வீராப்புப் பேசிய அவர், 'என்னைப் பொறுத்தமட்டில், விளைவுகள் எப்பேர்ப்பட்டவையாகத்தான் இருப்பினும் நாம் தீர்மானங்கள் எடுக்கையில் பந்தாடப்படுவது எனது உத்தேசமல்ல.' எனவும் வலியுறுத்திக் கூறிவைத்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் இந்த க்ஷணம பித்தம், க்ஷணம் வாத இரு மன நிலைப்பாடு, எவ்வாறாயினும் அவரது போட்டாபோட்டியாளர்களுக்குத்தான் வாய்ப்பாகிவிட்டிருக்கிறது. புதிதாக, அண்மையில் அவர் மேற்கொள்ள முனைந்துள்ள சமாதான நாட்டத்தில், பொல்லாத்தனிமை அவரை வாட்டுகிறது. அவருடைய இரண்டுங் கெட்டான் நிலைமைக்கு முத்தாய்ப்பு வைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாட் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் வெளியிடும் அபிப்பிராம் இதோ:

'ஏகோபித்த(ஓரேமனதான) ஒரு தேசியக் கருத்தொற்றுமையை உண்டாக்க ஜெயவர்த்தன விரும்புகிறாராயினும், அவ்வாற்றல் அவரிடமில்லை கடந்த காலத்தில் அவராற் கேடுகெட்ட கதியிற் கையாளப்பட்டுள்ள எதிர்க் கட்சியினரிடமிருந்து இன்று அவர் புரிந்துணர்வு எதனையும் எதிர்பார்க்க முடியாதிருக்கிறார்.'

(தொடரும்)

தென்னாபிரிக்க பத்திரிகை வற்புறுத்து; மண்டலேயை

## சிறைச்சாலையிலிருந்து உடனே விடுதலை செய்தாக வேண்டும்

(ஜோஹனஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் சிறைவைக்கப்பட்டுள்ள கறுப்பு இனத் தேசிய வாதத் தலைவரான திரு. நெல்ஸன் மண்டலேயை விடுதலை செய்ய வேண்டும் என்று தென்னாபிரிக்காவின் பிரதான பத்திரிகை ஒன்று வற்புறுத்தியுள்ளது. வர்த்தகம் சம்பந்தமான செய்திகளை முக்கியத்துவமளித்து வருகின்றது இப்பத்திரிகை. நிறத்துவேஷம் ஒழிய வேண்டும் என்றும் இப்பத்திரிகை அரசை வலியுறுத்தியுள்ளது.

சமீபத்தில் சத்திர சிகிச்சைக்குள்ளான திரு. மண்டலே சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுவார் என்று முன்னர் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அவர் சுகதேகியாக உயிர் வாழ வேண்டுமாயின் அவருக்கு நிம்மதி தேவை என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆயினும் அரசு சத்திரசிகிச்சை முடிந்த பின்பும் கூட அவரைத் தொடர்ந்து சிறையிலே அடைத்து விட்டது.

திரு. மண்டலே தொடர்ந்தும் சிறைவைக்கப்பட்டிருப்பது மேலும் வன் செயல்கள் மூளவே வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்ட தென்னாபிரிக்கப் பத்திரிகை அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

## அடுத்த வருடம் மார்ச் மாதம் சீனவில் பாரத திரைப்பட விழா

(புதுடில்லி)

அடுத்தவருடம் மார்ச் மாதம் சீனவில் பாரதத் திரைப்பட விழா நடைபெறவுள்ளது.

தற்போது சென்னையில் நடைபெற்றுவரும் சீனத் திரைப்படவிழாவில் இத்தகவல் வெளியிடப் பட்டது.

சீனத்தேசத்து ஐந்து திரைப் படங்கள் இவ்விழாவில் திரையிடப்படுகின்றன.

பாரத - சீன கலாச்சார பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் இந்நிகழ்ச்சிகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## செய்யாறு சட்டசபை தேர்தல் அ.தி.மு.க., தி.மு க. போட்டி

(சென்னை)

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள செய்யாறு சட்டசபை இடைத் தேர்தலில் அ. தி. மு. க. வும், தி மு. க. வும் நேரடிப் போட்டியில் இறங்கியுள்ளன.

அ. தி. மு. க. சார்பில் திரு. குப்புசாமியும், தி. மு. க வேட்பாளராக திரு. அன்பழகனும் போட்டியிடுகின்றனர்.

அடுத்த மாதம் பதினாறும் திகதி இவ்விடைத் தேர்தல் நடைபெறுகிறது.

சுயேட்சை வேட்பாளர்கள் பத்துப் பேரும் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

## அன்னை இந்திராவுக்கான தங்கநட்சத்திரம் தனயன் வியட்னாமிய தலைநகரில் பெற்றார்

(ஹனோய்)

மரணத்திற்குப்பின் வழங்கப்படும் மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கான வியட்னாமின் அதி உயர் விருதான 'தங்கநட்சத்திரத்தை' பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று ஹனோயில் பெற்றுக் கொண்டார்.

வியட்னாமியப் பாராளுமன்றச் சபாநாயகர் திரு. ஸின் இதனை அவருக்கு முறைப்படி வழங்கினார்.

இது தொடர்பான நிகழ்ச்சியில் திரு ராஜீவ் காந்தி பேசுகையில், இவ்விருது வழங்கப்பட்டதற்கு பாரத மக்களின் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அணுவாயுதப் பேரழிவை எதிர்த்து மக்கள் விமோசனத்



திற்காக திருமதி காந்தி விவேகத்துடன் போராடினார் என்று குறிப்பிட்ட அவர் 'எத்தகைய ரூபத்தில் வரும் அந்நியத் தலையீட்டையும் அவர் தைரியத்துடன் எதிர்த்தார்' என்றும் சொன்னார்.

பாரதமும்,வியட்னாமும் சுதந்திரம், பந்தோபஸ்து, சமாதானத் துறைகளில் ஒன்றுபட்டு உழைக்கும் என்றும் அவர் கூறினார்,

வியட்னாமில் பூங்கா ஒன்றிற்கு திருமதி காந்தியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கோரிக்கை

(சென்னை)

ஆசிரியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று ஆதித்திராவிடர் நலத் துறை அமைச்சர் திரு அருணாசலம் திண்டுக்கல்லில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

## பொற்கோயில் பிரதம குரு முதுகில் குண்டு பாய்ந்தது

(பஞ்சாப்)

பஞ்சாப் பொற்கோயில் பிரதம குருவான ஜியானி சாஹிப்சிங் நேற்று இனந்தெரியாத இருவரால் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தப் பட்டார்.

அவரது முதுகுப் புறத்தில் குண்டு பாய்ந்தது. அவரது மெய்க்காப்பாளர் துப்பாக்கிச் சூட்டில் மரணமானார்.

28 . 11 . 85 வியாழக்கிழமை

ஈழமுரசு

## ஹேலியின் வால்வெள்ளி இன்று பூமிக்கு அண்மையில் வருகிறது!

(புதுடில்லி)

ஹேலியின் வால்வெள்ளி இன்று வியாழக்கிழமை பூமிக்கு மிக அண்மையில் வருவதாக இந்திய விஞ்ஞானிகள் நேற்று அறிவித்தனர். ஆனாலும் இதனை எவரும் நேரடியாகப் பார்க்க முடியாதென அவர்கள் தெரிவித்தனர் தொலைநோக்கி மூலம் மட்டுமே வால்வெள்ளியை இப்போது பார்க்க முடியுமெனவும் விஞ்ஞானிகள் கூறினர். சூரிய உதயத்துக்கு முன்னர் இரு மணித்தியாலங்களுக்கும் சூரிய அஸ்தமனத்திலிருந்து அடுத்த இரு மணித்தியாலங்களுக்கும் வால்வெள்ளி தென்படக் கூடும்.

கொழுத்தும் வெய்யிலில் சுலோகத்துடன்

# யாழ் வந்துள்ள திருமலை, வவுனியா அகதித் தமிழர் நேற்று நடத்திய இருபது மைல் நீள ஊர்வலம்

(எட்வர்ட்லியோன்)

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து அரசாங்கத்தினால் அகதிகளாக்கப்பட்டு உயிர்களையும், தமது உடமைகளையும் இழந்து கடந்த மே மாதம் பதினைந்தாம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த தமிழினம் கடந்த அனுராதபுரச் சம்பவங்களினால் மேலும் பல ஆயிரக்கணக்கில் யாழ். மண்ணில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளது எம்மவர்க்கு அரசாங்கம் அவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வதற்கு உத்தரவாதம் கொடுத்தார்களா? அல்லது மாற்று நடவடிக்கைகள்தான் ஏதும் எடுத்தார்களா?

இவ்வாறு நேற்று யாழ்நகரில் தமிழ் மகளிர் அவை நடத்திய இடம் பெயர்ந்து வந்த அகதிகள் ஊர்வலம் முடிவடைந்தபோது தமிழ் மகளிர் அவை பேச்சாளராகிய திரு. இரா. முருகையா தெரிவித்தார்.

அகதிகளின் ஊர்வலம் நல்லூரில் ஆரம்பமாகி அரசடி வீதி வழியாக பலாலி வீதியை அடைந்த பின்னர் ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மெயின் வீதிகளினூடாக ஈச்சமோட்டைப் பகுதிக்குச் சென்று அங்கு மதிய உணவை அகதிகள் உண்டபின்னர் பாஷையூர் அந்தோனியார் கோவிலைச் சென்றடைந்து மீண்டும் அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டு யாழ். கச்சேரியில் முடிவடைந்தது.

ஊர்வலம் சுமார் இருபது மைல் தூரம் நடைபெற்றது.

இவ் ஊர்வலத்தில் "ராணுவத்தை வெளியேற்று", "எமது சொந்த மண்ணில் எம்மை வாழவிடு" என்று ஒலி பெருக்கிமூலம் கோஷமிட்டுச் சென்றனர். கொழுத்தும் வெயிலைப் பாராமல ஆண்களும், பெண்களுமாக கூடுதலானவர்கள் சிறுவர்களே இவ் ஊர்வலத்தில் சுலோகங்களைச் சுமந்து சென்றனர்.

ஒரு புறம் எரிந்த கடைகள், மறுபுறம் வெந்த பிணங்கள் இவை நடுவே நாம் ஓடி வந்தோம்.

"கையிலே குழந்தை; கண்ணிலே நீர்; எமது தாய்க் குலத்துக்கு இந்த நிலை ஏன்?".

"இழந்த எம் உயிர்களுக்குப் பதில் என்ன?" என்று சுலோக அட்டையில் எழுதப்பட்டிருந்தது. செல்வி கு. மஞ்சுளா நன்றி தெரிவித்துப் பேசினர்.

## நூல் வெளியீடு

(வண்ணார்பண்ணை)

பட்டப் படிப்புகள் கல்லூரி தமிழ் மாணவர் மன்ற நூல் நிலையத் திறப்பு விழாவும், புதிய மாணவர் வரவேற்பு விழாவும், "குறியீட்டு அளவையியல்" புத்தக வெளியீட்டு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதி, பட்டப் படிப்புகள் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு சி. வி. குணசேகரம் தலைமை தாங்குவார். பிரதம விருந்தினராக தொழிலதிபர் க. கனகராசா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக க. சிவஞானம், திரு. சி. குமாரவேல், இ. சதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

## வதிரியில் 'அடிமைகள்' அறிமுக விழா

நாவலாசிரியர் கே. டானியலின் 'அடிமைகள்' நாவல் அறிமுக விழா நாளை மறுதினம் 30-ம் திகதி சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு வதிரித் தமிழ் மன்றத்தில் திரு. சி. க. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும். அறிமுக உரையை எழுத்தாளர் தெணியான் நிகழ்த்துவார். திருவாளர்கள் கே. கிருஷ்ணபிள்ளை, கே. தங்கவடிவேல், எஸ். வன்னியகுலம், எஸ். யோகராசா, ரி. கலாமணி ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

## மந்திகை வைத்தியசாலை நிதிக்காக கொடிவாரம்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கொடிவார ஆரம்ப விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். கணேசநாதன் தலைமையில் இக்கொடிவார ஆரம்பவிழா நடைபெறும். பருத்தித்துறை நீதவான் திரு. கா. கணபதிப்பிள்ளை இவ் விழாவிலே பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்கின்றனர்.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவர். திரு. மு. பொ. வீரவாகு, ஜே. பி.நெல்லியடி வர்த்தகர் சங்கம் சார்பில் வர்த்தகர் திரு. ச. சிற்றம்பலம், வைத்தியசாலை அபிவிருத்துச் சபையின் பொருளாளரும் பிரபல வர்த்தகருமான திரு. சிவ. சிவராமலிங்கம் ஆகியோர் கொடிகளைவாங்கி கொடிவாரத்தை ஆரம்பித்து வைப்பார்கள். இதற்கான நடவடிக்கைகளை வைத்தியசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு. ச. செந்துராஜா மேற்கொண்டுள்ளார்.

## கல்விக் கந்தோர் கடன் வழங்கலில் ஆசிரியர்களின் அதிருப்தி

கல்வி அலுவலகாவின்சமீபகாலச் செயல்பட்டுவருமவிதம்குறித்து யாழ்ப்பாண ஆசிரியர்கள் மத்தியில் பரவலாக பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் வழங்கும் விஷயத்தில் கல்விக் கந்தோர் தற்போது கடைப்பிடித்து வரும போக்கு இப்போது ஆங்குள்ள ஆசிரியர்கள மத்தியில பெரும அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது.

வெள்ள நிவாரணப் பணம் கல்விக் கந்தோர் ஊழியர்கள் பலர் பெற்றுக் கொண்டு விட்டதாகவும ஆனால் இது பற்றி சில ஆசிரியர்களுக்கு ஒன்றுமே தெரியாத நிலை இப்போது இருந்து வருவதாகவும தெரிகிறது.

இவ்வித நஷ்ட நிவாரணக் கடன்கள் வழங்கப்படும்போது கல்வி அலுவலக ஊழியர்கள அதனை முழுமையாகப பயன் படுத்திக் கொள்வதாகவும், ஆசிரியர்களுக்கு அது பற்றித தெரியவரும்போது கடன்வழங்கும்வேலைகள் நிறுத்தப்பட்டோ அல்லது அதனை முழுமையாக பெறமுடியாத நிலை ஏற்பட்டு விடுவதாகவோ தெரிகிறது.

இதனால இங்குள்ள ஆசிரியர்கள தொழிற்சங்க ரீதியில் நடவடிக்கை எடுக்க ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது.

## சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சி

நல்லூர் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின மார்கழி மாத பயிற்சி வகுப்புகள் விரிவுரையாளர் திரு. ப. தர்மரத்தினத்தினால் நடாத்தப்படவுள்ளது. புதிதாகப பயிற்சி பெற விரும்புபவர்களும பயிற்சி பெற்ற அங்கத்தவர்களும முதலாம திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திற்கு வரும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

## சடலம் கையளிப்பு

நேற்று முன்தினம் சுன்னாகத்தில் மரணமாகி யாழ். பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்ட நடராசா குமரேசன் (22) என்பவரது சடலம மரண விசாரணையின் பின் உறவினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

### கடற்கரை....

சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமொன்று கரையில ஒதுங்கியிருக்கின்றது. இச்சடலத்தைப் பார்வையிட்டவர்கள், சென்ற வாரம் மன்னாரில இருந்து இந்தியாவிற்கு அகதியாகச் சென்றவராகவும இருக்கலாம் எனவும் சந்தேகித்து வருகின்றனர்.

### கடத்தப்பட்ட...

வடிக்கைகளை மேற்கொள்ள முடியாதென்று பொலிஸார் கைவிரித்துவிட்டதாகத் தெரிகிறது.

அதேவேளையில், மகாஓயாவில கடத்தப்பட்ட பௌத்த பிக்கு தொடர்பாகவும் எந்தத் தகவலும கிடைக்கவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

### இன்று....

தொண்பது நாட்களாகின்றன. எமது வாசகர்கள் 'ஈழமுரசு' அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்து ஏமாற்றமடைவதைத் தவிர்ப்பதற்காகவே இதனை அறியத் தருகின்றோம்.

### கொழும்பு...

றது.

இனப்பிரச்சினை விவகாரம் சம்பந்தப்பட்டதாகவே இது அமைந்ததாகவும் சுமார் ஒரு மணித்தியாலங்கள் வரை ஆலோசனை தொடர்ந்ததாகவும் தெரியவந்துள்ளது.

### நெடுந்தீவில் ...

ருந்த பதினொரு பேர் கடற்படையினரால கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வள்ளமும், வள்ளத்தில் காணப்பட்ட துணிவகை, வீடியோ டெக் ஆகியன மன்னார் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### 2 பெண்களு ...

அதோடு தர்மபுரம், முரசுமோட்டைப்பகுதிகளில் பரவலாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தது. எவரும் மரணமானதாகவோ, காயமடைந்ததாகவோ தெரிவிக்கப்படவில்லை. முரசுமோட்டையைச் சேர்ந்த ஒரு நபர் இராணுவத்தினருடன் இராணுவ உடையில் வந்து மேற்படி கைதானோரை காட்டிக் கொடுத்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

### பொல்லநறுவையில்....

உள்ளே தமிழ்ப்பயணிகள் இருந்தால் அவர்களைக் கீழ இறங்குமாறு ஆயுதபாணிகள் உத்தரவிட்டனராம்.

குறிப்பிட்ட ஏழு தமிழ்ப் பயணிகளும இறக்கப்பட்டபின்னர் பஸ் அங்கிருந்து செலலுமாறு அவர்களால பணிப்பு வழங்கப்பட்டதாகவும், நேற்றுக் காலை ஏழுபேரின் சடலங்களும் அனாதரவாகக் கிடக்கக் காணப்பட்டதாகவும் ராய்ட்டர் செய்தி கூறுகின்றது.

சடலங்கள் எதுவும் நேற்றிரவுவரை அடையாளம் காணப்படவில்லை.

நேற்றுமுன்தினம் நான்கு கொழும்புச் சிங்கள வர்த்தகர்கள் பொலநறுவையில் லொறிக்குள் வைத்து இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதன் எதிரொலியாக இது இருக்கலாமெனவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவங்கள் குறித்து கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவுக்கு உறவினர்களால் முறைப்பாடு செயயப்பட்டது. பிரஜைகள் குழுவைச் சேர்ந்த ஐந்து பேர் ஆனையிறவுமுகாமுக்குச்சென்று இது குறித்து பேச்சுவார்த்தை நடாத்தினர்.

### பெண்....

யர் சங்கம் தனது பாராட்டுகளைத் தெரிவிக்கின்றது.

அண்மைக் காலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வெற்றிடங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே நியமிக்கப்பட்டதற்காக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பலத்த ஆட்சேபனையைத் தெரிவித்ததுடன வடக்கு, கிழக்கில ஏற்படும் வெற்றிடங்களின் ஒரு பகுதி இடமாற்றங்களின் மூலமும், மறுபகுதி புதிய நியமனங்களின் மூலமும நிரப்பப்படல்வேண்டும் எனவும கல்வி அமைச்சினை வலியுறுத்தி வந்தது. ஆசிரியர் சங்கத்தின் நியாயத்தினை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சும, கல்விச் சேவைக்குழுவும வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வெற்றிடங்களின் ஒரு பகுதியினை புதிய நியமனத்தின் மூலம் நிரப்ப முன் வந்துள்ளனர். இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதுடன் இம்மாவட்டங்களின் கல்வித் தரம் மேலும் உயரும் எனத் தான் நம்புவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த, மகாசிவம் தெரிவித்தார்.

### தமிழீழப் ...

என்பதைப் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் இவ்வறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொற்கோவில்....

விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது கொலை முயற்சியைக் கண்டித்து ஹொங்கொங்கிலிருந்து பாரதப் பிரதமர் ராஜீவ காந்தி அறிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதி ஜெயில் சிங்கும் இம்முயற்சியைக் கண்டித்துள்ளார்.

இச்சம்பவத்தில் மரணமான மதகுருவின் பிரதான மெய்ப்பாதுகாவலரின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாவை வழங்குவதென்று பஞ்சாப் அரசு தீர்மானித்துள்ளது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 28-11-1985 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி; 23336